பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
22 04 2025 **TUESDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இந்தியா – சவுதி அரேபியா இடையிலான நட்புறவு, கடந்த பத்தாண்டுகளில் வலுவடைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

- மனிதகுல வளர்ச்சிக்கு பூமியை பாதுகாப்பது இன்றியமையாதது என்று மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா கூறியுள்ளார்.

- ஒரே நாடு – ஒரே தேர்தல் மூலம், நாட்டிற்கு 4 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு ஏற்படும் என்று நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் திரு. பி.பி. சௌத்ரி தெரிவித்துள்ளார்.

- பாரதிதாசனின் பிறந்த நாளையொட்டி இம்மாதம் 29ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 5ஆம் தேதி வரை தமிழ்வார விழாவாக கொண்டாடப்படும் என்று தமிழக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

- புனே சர்வதேச மகளிர் கிராண்ட்ப்ரீ செஸ் போட்டியின் தரவசையில் இந்தியாவின் **Koneru Humpy** முதலிடத்தில் உள்ளார்.

**>>>>>><<<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் அரசுமுறைப் பயணமாக இன்று சவுதி அரேபியா புறப்பட்டுச் சென்றார்.

அந்நாட்டு பட்டத்து இளவரசரும், பிரதமருமான திரு. **Mohammed Bin Salman** அழைப்பின் பேரில் சவுதி அரேபியா சென்றுள்ள பிரதமர், இந்தியா - சவுதி அரேபியா இடையிலான நீடித்த ஒத்துழைப்பு கவுன்சிலின் இரண்டாவது கூட்டத்தில் பங்கேற்கிறார்.

தமது பயணத்தை ஒட்டி பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்தியா – சவுதி அரேபியா இடையிலான வரலாற்று ரீதியான நட்புறவு, கடந்த பத்தாண்டுகளில் வலுவடைந்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு, வர்த்தகம், எரிசக்தி, முதலீடு உள்ளிட்ட துறைகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வளர்ச்சியடைந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருநாடுகளும் பிராந்திய அமைதி, வளம், பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையை பாதுகாக்க உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

சவுதி அரேபியாவில் உள்ள இந்திய சமுதாயத்தினருடனான சந்திப்பை ஆவலுடன் எதிர்நோக்கியிருப்பதாகவும் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

உலக புவி தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், மனிதகுல வளர்ச்சிக்கு சுற்றுச்சூழல் அவசியம் என்பதால், பூமி தாயை பாதுகாப்பது இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

பூமியிலிருந்து நாம் அடையும் நன்மைகளுக்கு பிரதிபலனாக, பூமியின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

நீடித்த வளர்ச்சிக்காக உலக அளவில் மேற்கொள்ளப்படும் முன்முயற்சிகளுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு ஆதரவளித்து வருவதுடன், இதே நிலைப்பாட்டுடன் பணியாற்றி வருவதாகவும் அவர் கூறினார்.

பூமியை பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள சுற்றுச்சூழல் ஆர்வலர்களுக்கும் திரு. அமித் ஷா பாராட்டு தெரிவித்துள்ளார்.

மத்திய வேளாண் அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், உலக புவி தினத்தில் இயற்கை ஆர்வலர்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

இந்நாளில் பூமியை பசுமையானதாகவும், தூய்மையானதாகவும் பாதுகாக்க, மரக்கன்றுகளை அதிக அளவில் நட்டு பராமரிக்க உறுதியேற்போம் என்று திரு. சிவராஜ் சிங் சௌஹான் கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கையால், உலகின் ஐந்தாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் ஸ்டாண்ஃபோர்டு பல்கலைக் கழகத்தில் இன்று உரையாற்றிய அவர், இந்த வளர்ச்சி இந்தியாவின் வலிமை மற்றும் உலக நாடுகளுடனான இணக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது என்று கூறினார்.

குறிப்பாக, டிஜிட்டல் பொது கட்டமைப்புகளை உருவாக்குவதில் இந்தியா பெரும வெற்றிபெற்றிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மகளிர் பாதுகாப்பு, அவர்களது ஆரோக்கியம் மற்றும் நிதி சுதந்திரத்தை மேம்படுத்த மத்திய அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களையும் திருமதி. நிர்மலா சீதாராமன் பட்டியலிட்டார்.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரில் கனமழை மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட ராம்பன் மாவட்டத்தில் சீரமைப்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், தட்பவெப்ப நிலை மோசமாக உள்ளபோதிலும், அதிகாரிகள் தங்களது பணியை சிறப்பாக மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

மின்விநியோகம் சீரடைந்திருப்பதாகவும், தேசிய நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் நாளைக்குள் முடிவடையும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதனிடையே, ஜம்மு காஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இப்பகுதியில் மீட்புப் பணிகள் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

சாலை சீரமைப்புப் பணியிலும் அதிகாரிகள் இரவு பகலாக ஈடுபட்டுள்ளதாக குறிப்பிட்ட திரு. உமர் அப்துல்லா, அடுத்த 24 மணிநேரத்திற்குள் ஒருவழிப் பாதை தயாராகி விடும் என்றும் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

ஒரே நாடு – ஒரே தேர்தல் மூலம், நாட்டிற்கு 4 லட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய் சேமிப்பு ஏற்படும் என்று இந்த மசோதா குறித்த நாடாளுமன்ற கூட்டுக் குழுவின் தலைவர் திரு. பி.பி. சௌத்ரி தெரிவித்துள்ளார்.

இக்குழுவின் கூட்டம் புதுதில்லியில் இன்று நடைபெறுவதை ஒட்டி, அவர் அளித்த பேட்டியில், நாட்டின் நலன் கருதியே ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா கொண்டுவரப்பட்டுள்ளது என்றார்.

இது நாட்டின் பொருளாதாரத்திற்கு உதவிகரமாக இருப்பதுடன், அடிக்கடி தேர்தல் நடத்துவதால், மாணவர்கள், ஆசிரியர்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை போக்குவதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும் தேர்தல் பணியில் ஈடுபடும் அரசு ஊழியர்கள் மற்றும் பாதுகாப்புப் படையினரின் தேவையும் பெருமளவு குறைக்கப்படும் என்று அவர் கூறினார்.

இன்றைய கூட்டத்தில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் திரு. ஹேமந்த் குப்தா, திரு. எஸ்.என். ஜா மற்றும் மூத்த வழக்கறிஞர் திரு. அபிஷேக் மனு சிங்வி உள்ளிட்டோர் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்க உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மசோதா குறித்து, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்கள் வாரியாக கருத்து கேட்டறியப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

குழுவின் நடவடிக்கைகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்படும் என்று குறிப்பிட்ட திரு. பி.பி. சௌத்ரி, சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் தங்களது கருத்துக்களை இணையதளம் வாயிலாக தெரிவிக்கலாம் என்றும் கூறினார்.

>>>>>><<<<<<

பாவேந்தர் பாரதிதாசனின் பிறந்த நாளையொட்டி, இம்மாதம் 29ஆம் தேதி முதல் அடுத்த மாதம் 5ஆம் தேதி வரை தமழகம் முழுவதும் தமிழ்வார விழா கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இதனை தெரிவித்த அவர், அனைத்து மாவட்டங்களிலும் நடைபெறும் இந்த விழாவின் போது தமிழ்மொழி மற்றும் பாவேந்தரின் சிறப்புகளை எடுத்துரைக்கும் விதமாக கவியரங்கம், கருத்தரங்கம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்று கூறினார்.

பாரதிதாசன் பெயரில் இளம் படைப்பாளர்களுக்கு விருது வழங்கப்படும் என்றும், புகழ்பெற்ற படைப்புகள் குறித்து ஆய்வரங்கம் நடத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

பள்ளி மாணவ மாணவிகளுக்கு பேச்சு, கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தப்படுவதுடன், இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடத்தப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

**>>>>>><<<<<<**

தூத்துக்குடி **NTPL** அனல் மின்நிலையத்தில் பணியாற்றி வரும் ஒப்பந்த ஊழியர்கள், சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் ஊதிய உயர்வு வழங்குவது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மேற்கொண்டுள்ள வேலைநிறுத்தம், இன்று ஆறாவது நாளாக நீடிக்கிறது.

இதன் காரணமாக, அனல் மின் நிலையத்தில் 80 சதவீத மின்உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - லெட்சுமணன் 35 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள அமெரிக்க துணை அதிபர் திரு. **J.D. Vance** இன்று ஜெய்ப்பூரில் உள்ள பிரசித்தி பெற்ற **Amber** கோட்டையை தமது குடும்பத்தினருடன் பார்வையிட்டார்.

அவரை ராஜஸ்தான் முதலமைச்சர் திரு. பஜன்லால் சர்மா, துணை முதலமைச்சர் திருமதி. தியா குமாரி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அமெரிக்க துணை அதிபரை சிறப்பிக்கும் விதமாக, இந்திய பாரம்பரிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

துணை அதிபர் திரு. **J.D. Vance,** இன்று பிற்பகல் ஜெய்ப்பூரில் நடைபெறவுள்ள ‘இந்திய-அமெரிக்க வர்த்தக உறவின் எதிர்காலம்’ என்ற தலைப்பிலான வர்த்தக மாநாட்டில் கலந்து கொள்கிறார்.

**>>>>>><<<<<<**

புனேயில் நடைபெற்று வரும் சர்வதேச மகளிர் கிராண்ட்ப்ரீ செஸ் போட்டியின் தரவரிசையில் இந்தியாவின் **Koneru Humpy** முதலிடத்தில் உள்ளார்.

இப்போட்டியின் 7வது சுற்றில் சீனாவின் **Zhu Liner-**ஐ வென்ற அவர் 5 புள்ளி ஐந்து புள்ளிகளை பெற்றுள்ளார்.

**>>>>>><<<<<<**

ஆசிய இளையோர் குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் **Aman** முதல் சுற்று ஆட்டத்தில் வெற்றி பெற்றார்.

ஜோர்டானின் அம்மானில் நடைபெற்று வரும் ஆடவர் 63 கிலோ எடைப் பிரிவில், அவர் கிர்கிஸ்தானின் **Abu Bakkir Duisheev-**யை வென்றார்.